1981 மார்ச் 28]

மேலும் 10 சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் சிட்கோ நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன. உபயோகப் படுத்தப்படாமல் உள்ள நிலங்களை சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றியமைக்க 'சிட்கோ' நிறுவனத்துக்கு ஒதுக்கீடு செய்வது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த ஒரிக்கை பகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படாததால் தொழில்கள் அங்கே வளர வாய்ப்பில்லை. ஆகவே, அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா? வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

உத்தமசோழபுரம் சுரபுரநாதஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

*வினா எண். 529—செல்வி பி. விஜயலட்சுமி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளது?

(ஆ) அதை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்திருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வீரபாண்டி தொகுதி உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதஸ்வாமி கோயிலுக்கு இப்பொழுதுள்ள மொத்த நிலங்கள் 10.73 ஏக்கர் உள்ளன. (நன்செய் 1.17 மற்றும் புன்செய் 9.56).

(ஆ) 1.42 ஏக்கர் புன்செய் நிலம் 14 நபர்களால் குடிசைகளைபோட்டு ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. ஆலய அர்ச்சகர் வசம் 6.54 ஏக்கர் உள்ளது. கருணா ரோலிங் மில் பங்குதாரர் கே. பி. கணேசன் என்பவரிடம் 2.48 ஏக்கர் உள்ளது.

செல்வி பி. விஜயலட்சுமி : மாண்புமிகு தலைவரவர்களே, அறநிலையக் கமிட்டி சிபாரிசின் பேரில் 'ஸ்டீல் ரோலிங்' கம்பெனிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நிலம் எத்தனை

ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது ? அந்த குத்தகை காலம் முடிந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்த ரோலிங் மில்லுக்கு 1—7—1972 முதல் 30—6—1977 முடிய 5 ஆண்டு காலத்திற்கு, ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. குத்தகை முடிவடைந்த பின் நிலம் ஒப்படை செய்யப்படவில்லை. ஆகவே, சேலம் கூடுதல் சபார்டினேட் ஜட்ஜ் வழக்குமன்றத்தில் தாவா தொடரப்பட்டிருக்கிறது. அந்த தாவா நிலுவையில் உள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன கருணா ஸ்டீல் ரோலிங் மில் சம்பந்தப்பட்ட இடம் ஏற்கெனவே அறநிலையத் துறையால் அனுமதிக்கப்பட்டு, அங்கே பெர்மனண்டாக தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அங்கே அந்த மில் தொடர்ந்து இயங்குகின்ற காரணத்தால் அந்த நிலத்தின் 'லீஸ்' காலத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே என்னிடத்தில் கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர்? அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களா என்பது. அதற்கு பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு இந்த கருணா ஸ்டீல் ரோலிங் மில்லைப்பற்றிய குறிப்புகள் தெரிந்திருக்கின்றன என்று தெரிய வருகிறது. அதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டபோது 5 ஆண்டு குத்தகை என்றுதான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை ஒப்பந்தம் செய்கிறபோது, குத்தகை முடிந்த பின்னால் நிலத்தை திருப்பித் தந்துவிட வேண்டுமென்று விதிகள் போடப்படுவதுதான் வழக்கம். ஆகவே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிற விவரத்தின்படி நிரந்தரமாக அந்த இடத்தை அவர்களுக்கே பராதீனம் செய்து கொள்ள விதிகள் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அப்படி இருந்தால் வழக்கு மன்றத்திற்கு அறநிலைய நிர்வாகிகள் போயிருக்க முடியாது.

சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி.

*வினா எண். 530— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நிரந்தரமாக ஒரு பொருட்காட்சி ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா ?